அதனால் ஏற்படும் நஷ்டத்தை சரிக்கட்டுவதற்கு டெல்லி சர்க்கார் முன்வர வேண்டும். நாம் எவ்வளவுதான் திட்டத்தை நிறை வேற்றினாலும் கூட, டெல்லி சர்க்கார் ஒத்துழைக்க வேண்டியது மிகமிகத் தேவை. அந்த அளவுக்கு டெல்லியிலிருக்கிற மத்திய சர்க்காரை நாம் வலியுறுத்தி, அங்கேயிருந்து மின்சாரத்திற்குத் தேவைப்படுகிற கனிப் பொருள்களைப் பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற சர்க்கார் சில கிராமங்களுக்கு மின்சாரத்தை விரைவிலே வழங்க வேண்டும்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் தாதாபுரம், வேம்பனேரி, கல்விளங்கம், அரசராமணி, காவேரிப்பட்டி முதலிய கிராமங்கள் ஓரளவுக்கு முன்னேறியிருக்கின்றன. பூர்த்தியாக அந்த கிராமங் களுக்கு மின்சாரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பி. வெங்கடசாமி: தெலுங்கில் உரையாற்றத் தொடங்கினர்.

7. நடைமுறைக் கேள்வி.

(அ) ஓர் உறுப்பினரின் தெலுங்கு உரையை மொழிபெயர்ப்பது குறித்து.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்தப் பேச்சை டிரான்ஸ்லேட் செய்தால், என்ன பேசுகிறார் என்பது தெரியும். தலைவர் அவர்கள் இதை டிரான்ஸ்லேட் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி ஏற்கனவே பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நண்பர் வெங்கடசாமி அவர்களுக்கு ஆங்கிலமும் தெரியும், தமிழும் தெரியும். அவர்கள் இந்த இரண்டு மொழிகளில் ஏதாவது ஒன்றில் பேசினால், அவருடைய தொகுதியைப் பற்றி சொல்கிற விஷயங்களுக்கு பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும், அதிகாரிகளுக்கும் புரியும். தனக்கு இருக்கிற தெலுங்கு ஆர்வத்தைக் காட்டிக் கொள்வதில் தவறு இல்லை. அவருக்கு தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. தன்னுடைய கருத்துக்களை அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டு பதில் சொல்ல வேண்டுமென்று எதிர் பார்த்தால், அதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால், தமிழிலேயோ, ஆங்கிலத்திலேயோ பேசினால் நல்லது. வீண் பிடிவாதமாக எங்கேயோ ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்தியிலே பேசுவது போல் வேண்டுமானால் பேசலாம். இங்கு வெறி உணர்ச்சி யாருக்கும் கிடையாது.

எல்லோருக்கும் புரிந்த மொழியில் பேசுவது நல்லது. பிடிவாதமாக தெலுங்கில் தான் பேசவேண்டும் என்றால், அதை நான் தடுக்கவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, the Hon. Minister has stated that I am speaking only to show my fanaticism. But I am sorry to say . . . .

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I shall correct myself. I have not called it fanaticism.

கனம் உறுப்பினர் அவர்கள் தெலுங்கில் பேசும் உரிமையை யாரும் ஆட்சேபிக்கவில்லை. தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. அவர்கள் பேசும்போது தொகுதியைப் பற்றிய விவரங்களை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும், பதில் சொல்ல வேண்டும் என்றால், தயவுசெய்து புரியும் மொழியில் பேசினால் நல்லது என்று சொன்னேன். யோசனையாகத்தான் சொன்னேன். நான் அதை ஆட்சேபிக்கவில்லை. என்னுடைய யோசனையை ஏற்கவில்லையென்றால், கவலையில்லை. தாராளமாக எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசலாம்.

THIRU T. MARTIN : Now we have recognised this language as one of the official languages for the purpose . . . .

THE HON. THIRU P. U. SHANMUGHAM : I have not objected to it.

THIRU T. MARTIN : Now the point is that the hon. Member speaks in Telugu and he wants some arrangements to be made for translation of his speech and then only the Hon. Minister will be in a position to reply to the points raised in his speech.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டரா ?

THIRU T. MARTIN : Sir, I am asking whether there is any machinery for translation here.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. தயவுசெய்து உட்காருங்கள்.

THIRU T. MARTIN : Under the Rules you have recognised it.

MR. SPEAKER : It is not a point of order.

இப்படி தெலுங்கில் பேசுவதை மறுத்தால்தான் பாயிண்டு ஆப் ஆர்டர் எழுப்ப வேண்டும். யாரும் மறுக்கவில்லை. அமைச்சர் அவர்கள் யோசனையாகத்தான் சொன்னார். கனம் உறுப்பினர் அவர்களும் ஒரு யோசனையைத்தான் சொல்கிறார்கள்.

Let the hon. Member please resume his seat.

THIRU T. MARTIN : His speech will have no effect unless it is translated.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்காக டிரான்ஸ்லேஷன் வேண்டும் என்கிறீர்களா ?

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir according to the Assembly Rules, an hon. Member can speak also in Telugu. The Hon. Minister is indirectly discourging the hon. Member from talking in Telugu.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I am sorry. Let the hon. Member speak in Telugu.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் குறை கூறவில்லை. தங்களுக்குப் புரியும் முறையில், உறுப்பினருக்கு பதில் சொல்வதற்கு, தெரிந்த மொழியில் பேச வேண்டும் என்று ஒரு யோசனைதான் சொன்னார்கள். தெலுங்கில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது அங்கத்தினருக்கு. யாரும் அதை மறுக்கவில்லை. உரிமை கொடுத்ததால்தான் அவர்கள் தெலுங்கில் பேசுகிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, I have already expressed the difficulty that I cannot speak well in English.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ப்ளநேஷன் வேண்டாம் ; பேசுங்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, I request you to have a Translator to enlighten the Members of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள். மந்திரிகளுக்கு உங்கள் கருத்துக்களைக் கிடைக்கச் செய்வார்கள்.

THIRU B. VENKATASWAMY : Otherwise, I will be deprived .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள் ; பேசும் கருத்துக்களை அமைச்சருக்குக் கிடைக்க ஏற்பாடு செய்வார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, my request to the Chair is that my speeches are not recorded in the official proceedings also. So, I request the Chair to arrange for the translation of my speech into English or Tamil. There is no harm in it. Because I cannot express my ideas well either in English or Tamil, I am speaking in Telugu. I take the privilege of speaking in Telugu by getting permission from the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள்தான் பேசுங்கள் என்கிறேனே.

திரு. டி. மார்டின் : Sir, on a point of order. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர்?